# மரண தண்டனையின் அவசியமின்மைப் பற்றி ஓர் குறள் கண்ணோட்ட ஆய்வு.

ரெக்ஸ் சகாயம் அருள் M.S (Univ. of Florida)
Lead Systems Engineer, Atlanta, Georgia, USA.
Member, Amnesty International USA.

டாக்டர் முத்துசுவாமி Ph.D (Univ. of Miami)
Senior Engineer, Tallahasse, Florida, USA.

<u>முன்னுரை</u>:

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தப் பைந்தமிழில் இவ்வுலகுக்கு திருக்குறள் என்னும் சாவா மருந்தினை அளித்தத் தெய்வப்புலவர் வான்புகழ் வள்ளுவனார் , இன்றையக் காலத்திற்குரிய சமூக மற்றும் சட்டச் சிக்கல்களுக்கு வழிகோலும் வகையில் பல சமுதாயக் குற்றவியல் மற்றும் தண்டனை முறைகளைப் பற்றி எடுத்தியம்பியுள்ளார் . சங்க கால நூல்களில் சட்ட நெறிகள் மிளிர்ந்து காணப்பட்டது. அதிலும் திருக்குறளில் தற்கால நீதிமுறைகளை வலியுறுத்தும் உன்னதக் கருத்துக்களை ஏராளமாகக் காணலாம் . சட்டத்தின் வரலாறு என்பது கோட்பாடுகளின் வரலாறை ஒத்தது (The history of law is the history of ideas) என்று கூறும் சட்ட வல்லுனர் ஒருவரின் கூற்றை [1] எடுத்துக்கொண்டோமேயானால், அக்காலத்திலேயே தமிழர் சமுதாயம் எத்தகைய சமுதாய வளர்ச்சியை அடைந்திருந்தது எனபதனை அறியலாம்.

இன்றையச் சமூகத்தில் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகின்றன. குற்றவாளிகளைத் தண்டிக்க சமூகங்கள் பலவித தண்டனை முறைகளைக் கையாளுகின்றன. அவற்றுள், அதிகமான தர்க்கங்களுக்கு உள்ளாகியிருப்பது மரண தண்டனை . அமெரிக்காவின் 50 மாநிலங்களில் 38 மாநிலங்களிலும், மேலும் உலகின் பல நாடுகளிலும் இம்முறைத் தண்டனை அவசியம் தானா என்று அச்சமூகங்கள் சமய, சமூக, நீதி, மனித உரிமை மற்றும் அனைத்து ஆர்வலர்களின் கருத்துக்களையும் அறிய விழைந்துக்கொண்டிருக்கின்றன . இத்தருணத்தில், உலகப் பொதுமறையாம் திருக்குறள் இத்தண்டனை முறையைப் பற்றி கூறும் கருத்துக்கள் என்ன என்பதை ஆய்வுசெய்து இவ்வாய்வரங்கத்தில் பணிவன்புடன் சமர்ப்பித்துள்ளோம். இவ்வாய்வில் நாங்கள் கண்ட உண்மை என்னவெனில் , வள்ளுவப் பெருந்தகையின் பார்வையில் மரண தண்டனை ஒருபோழ்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதேயாம்.

எங்களாய்வுக்கு நாங்கள் இத்தலைப்பினை எடுத்துக்கொண்டதற்கு பல காரணங்கள் உண்டு. சமூக மற்றும் சமய ஆர்வலர்கள் இது மனிதாபிமானமற்ற முறை என்று பார்ப்பது , இத்தகையத் தண்டனைகள் மூலம் இயேசுபிரான் , சிலப்பதிகாரக் கோவலன் போன்று நிரபராதிகள் கூட தண்டிக்கப்படும் வாய்ப்புகள் இருப்பது , மரண தண்டனையின் மூலமாக குற்றங்கள் குறையும் என்னும் வாதத்தை நிராகரிக்கும் வகையில் கிடைத்திருக்கும் ஆய்வுகளின் அறிவு , தண்டனை என்பது மனமாற்றத்திற்கும் குற்றவாளியின் சீர்த்திருத்தத்திற்கும் உகந்ததாக இருக்கவேண்டுமே ஒழிய பழிக்குப் பழியாக இருத்தல் கூடாது என்பன அவற்றில் சில . மரண தண்டனையானது அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கும் இறுதியான , தீர்க்கமான தண்டனை முறையாகும் . ஜார்ஜியா மாநிலத்தின் இரண்டு திருப்புமுனை வழக்குகளான <u>ஃபுர்மான் v. ஜார்ஜியா(1972)</u> [2] மற்றும் <u>கிரெக் v. ஜார்ஜியா (1976)</u> [3] தான் இதுகாறும் கடந்த 30 ஆண்டுகளாக அமெரிக்காவின் மரணதண்டனை காட்சிக்கு அடித்தளமாகவுள்ளது . ஜார்ஜியாவில் வசிக்கும் எமக்கு அதில் தனிப்பட்ட அக்கறை உண்டு . 2003-ம் ஆண்டில் , உலகமெங்கும் 63 நாடுகளில் உள்ள குறைந்தபட்சம் 2,756 கைதிகளுக்கும், 28 நாடுகளில் உள்ள குறைந்தபட்சம் 1,146 கைதிகளுக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனைகளில், சீனா, ஈரான், அமெரிக்கா மற்றும் வியட்னாம் அரசுகளின்

பங்கு 84% ஆகும். ஆக உலகின் வல்லரசு நாடான அமெரிக்காவின் பங்கு அதிகமாக இருப்பதாலும் இத்தமிழ்க் கருத்தரங்கு அமெரிக்கத் தலைநகரமான வாசிங்டனில் நடைபெறுவதாலும் இக்குறளாராய்வு சாலப் பொருந்தும். தற்சமயம் வரை 118 நாடுகள், குற்றவியல் சட்ட வழிகளில் அல்லது செயல்முறையில் மரண தண்டனையை முற்றிலும் அகற்றிவிட்டன. ஐரோப்பிய யூனியனில் அங்கம்வகிக்க விரும்பும் ஒரு நாட்டில் மரண தண்டனை முற்றிலும் தடை செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், சமீபத்தில் கொல்கொத்தாவில் தூக்கிலிடப்பட்ட திரு . தனன்செயன் சட்டர்ஜியின் வழக்கின் மூலம் இந்தியாவில் மரண தண்டனைப் பற்றிய விவாதம் வலுப்பெற்று வருகின்றது. சமூகத்தில் மிகவும் நலிந்தப் பிரிவினரையும், மனவியாதி நோயாளிகளையும், அரசியல் எதிரிகளையும், சிறார் மற்றும் விடலைப் பருவத்தினரையும், வயோதிகரையும் குறி வைத்துத் தாக்கும் இத்தண்டனை முறை, வள்ளுவனாரின் சீரியக் கொள்கைகளுக்கு ஏற்புடையது அன்று.

<u>மரண தண்டனை -- ஒரு சிறு பின்னணி:</u>

எங்கள் ஆய்வுக்கு நாங்கள் இந்தியா மற்றும் அமெரிக்க நாடுகளின் நீதி மற்றும் சமுதாயத் துறைகளை எடுத்துக்காட்டுகளாக கையாண்டுள்ளோம். அமெரிக்க மற்றும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டங்கள் மரண தண்டனைக்கு அனுமதியளித்துள்ளன. அமெரிக்கச் சட்டத்தில் 8-ஆம் மாற்றத்தில்[4] ( 8th Amendment ) துன்புறுத்துதல் மற்றும் கொடுமையான தண்டனைகளுக்கு அனுமதி கிடையாது; அதேபோல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21(1)படி[5] குடிமக்களின் உயிருக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. மரண தண்டனையை எதிர்ப்போர் இச்சட்டங்களின் அடிப்படையில் வாதாடினாலும், இரு நாட்டு நீதிமன்றங்களும் அதனை ஏற்றுக்கொண்டதில்லை[6]. இந்தியாவில் 1898 ல் இருந்த குற்றவியல் சட்டத்தின் படி, மரணத்திற்கு தண்டனை மரணம் என்றிருந்தது. அதனை 1955-ஆம் ஆண்டு[7] ஒரு சட்ட சீர்திருத்தத்தின் வாயிலாக வழக்கை விசாரிக்கும் நீதிபதியின் விருப்பத்திற்கு தீர்மானிக்கும் உரிமை வழங்கப்பட்டது. பின்னர், 1974-ல் அமுலுக்கு வந்த சட்ட மசோதாவில், ஆயுள் தண்டனை முதன்மைப்படுத்தப்பட்டு, மரண தண்டனை ஒரு விசேட தண்டனையாகப் பரிந்துரைக்கப்பட்டது[8]. பின்னர் இந்திய உச்ச நீதிமன்றம் 1983 மற்றும் 1994-ல் இருவேறு வழக்குகளில் மரண தண்டனையானது மிகவும் அபூர்வமான வழக்குகளுக்கு ("rarest of the rare cases") மட்டுமே பொருந்தும் என்றும் பரிந்துரைத்தது[9]. மேலும் 1976 ம் ஆண்டு நடந்த ஒரு வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் சிறார் குற்றவாளிகளுக்கு மரண தண்டனையிலிருந்து விதிவிலக்கு அளித்தது[10]. அமெரிக்க உச்ச நீதிமன்றமோ, மார்ச் 1, 2005-ல் தான், கடைசி நாடாக, சிறார் குற்றவாளிகளை மரண தண்டனையிலிருந்து நீக்கியது[11]. இந்தியாவில் தூக்கு தண்டனை முறை அமுலில் உள்ளது. அமெரிக்காவில், தூக்கு, துப்பாக்கிச் சூடு,விசவாயு இயந்திரம், இரசாயண ஊசி ஆகிய வழிகளில் மரண தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. அமெரிக்காவில் 12 மாநிலங்களில் மரண தண்டனை தடை செய்யப்பட்டுள்ளது. இரு நாட்டிலும், அந்நாட்டு ஜனாதிபதிகள் மரண தண்டனைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம். 1972-ஆம் ஆண்டு அமெரிக்க உச்ச நீதிமன்றம் <u>ஃபுர்மான் v. ஜார்ஜியா(1972) [2]</u> வழக்கில் மரண தண்டனை விதிப்பதில் முரண்பாடுகள் இருப்பதைக் கண்டு அதனை தடை செய்தது. பின்னர் 1976-ஆம் ஆண்டு <u>கிரெக் v. ஜார்ஜியா (1976) [3]</u> வழக்கில், பல மாநிலங்களின் சட்ட மாற்றங்களை கருத்தில் கொண்டு மரண தண்டனைக்கு மீண்டும் பச்சைக் கொடிகாட்டியது. அன்றிலிருந்து இன்று வரை, சுமார் 850 பேர்[12] மரண தண்டனையால் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 3700 பேர்[12] தங்கள் சாவை எதிர் நோக்கி காத்துக்கொண்டுள்ளனர். கிட்டத்தட்ட 100 மரண தண்டனைக்[12] கைதிகள் தவறுதலாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கொடுமை வெளியில் கசிந்து அதன் மூலம் விடுவிக்கப்பட்டனர். 2003-ஆம் ஆண்டு, மரண தண்டனையின் தீவிர ஆதரளவானரான இல்லினாய் ஆளுநர் ஜார்ஜ் ரயான் அவர்கள், 2000-ஆம் ஆண்டில் 12 கைதிகள் தவறுதலாக மரண தண்டனை விதிக்கப்பட்ட அவலத்தை அறிந்து உடனேயே அம்மாநிலத்தில் மரண தண்டனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார்[12]. இந்தியாவிலுள்ள கொடுமை என்னவெனில் மத்திய உள்துறை அமைச்சகத்திலோ வேறு எந்த மத்திய இலாக்காவிலோ இத்தகைய எண்ணிக்கையை பராமரிக்கப்படுவது

கூடக்கிடையாது. எனவே இந்திய அரசாங்கத்தின் மரண தண்டனை ஆதரவானது நிலையான கோட்பாட்டை உள்ளடக்கியதேயன்றி(ideological), அறிவியல் பூர்வமானது (scientific) அன்று[13]. மேலும் ஐக்கிய நாடுகள் அவையின் பல மசோதாக்களின் படி, உறுப்பினர்கள் எதிர்காலத்தில் தத்தம் நாடுகளில் படிப்படியாக மரண தண்டனையை முற்றிலும் ஒழிக்கவேண்டிய தீர்மானங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது, வேறு சிலவற்றை இந்திய மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்ளாமல் காலம் தாமதித்து வருகின்றது. இவ்வாய்வுரைக்கு இம்மட்டும் விபரங்கள் போதுமானது, ஏனெனில் இவ்வாய்வுரை வள்ளுவரின் கருத்துகளைப் பற்றியதேயன்றி மரண தண்டனையைப் பற்றி மட்டும் அன்று.

## <u>குற்றத்திற்கு தண்டனை அவசியம்</u>:

கொடுங்கோன்மை அதிகாரத்தில் வள்ளுவப் பெருமகனார், குற்றத்திற்கு தண்டனை மிக அவசியம் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். கொலைப் போன்ற கொடியக் குற்றங்கள் புரிவோரை தண்டிப்பது, பயிரின் செழிப்புக்காக களைகளை எடுப்பது போன்றாகும் என்று கூறுகின்றார்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர். (குறள் 550)

ஓர் அரசாங்கமானது சட்ட ஒழுங்கை பராமரிக்க குற்றங்கள் நிகழாவண்ணம் தடுப்பதோடு மட்டுமல்லாமல், அவை நடந்தால் தண்டிக்கவும் தயங்கக்கூடாது என்று வள்ளுவர்,

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். (குறள் 549).

கூறுகின்றார். இதில், "குற்றம் கடிதல் வடுவன்று ," என்று கூறுமட்டும் , நிகழ்ந்தக் குற்றங்கட்கு தண்டனை வழங்குவதில் தவறு ஏதுமில்லை , மாறாக அது அரசின் தலையாய பணி என்றும் , "வேந்தன் தொழில் ," என்ற சொற்களில் தெளிவுபடுத்துகின்றார் . ஆக, தண்டனை என்பதில் வள்ளுவருக்கு மாற்று கருத்தேதுமில்லை . ஆனால் அதுவும் ஒரு கொலையாக , கொடியத் தண்டனையாக இருக்கவேண்டுமா என்பது தான் ஆய்வே.

## <u>அரசு மற்றொரு கொலை இயந்திரமாக செயல்படலாகாது:</u>

சமீபத்தில் தனன்செயன் சட்டர்ஜி மரண தண்டனை வழக்கு விவாதத்தில் ஆங்கில முன்னணி நாளேடான The Hindu ல் ஓர் வாசகர் , வள்ளுவர் மரண தண்டனை அவசியம் என்று வலியுறுத்துவதாக குறள் 550-ஐ மேற்கோள் காட்டியது[14] வேடிக்கையாய் அமைந்திருந்தது. ஒன்றன் பொருளை அறிய விழையும் போழ்து, பொருட் சூழல் (context) என்பது மிக அத்தியாவசியமானது. இக்குறளில், குற்றம் புரிந்தவருக்கு தண்டனை அவசியம் என்று நியாயப்படுத்தும் தெய்வப்புலவர், அத்தண்டனை மற்றொரு கொலையாக , மரண தண்டனையாகத் தான் இருக்க வேண்டும் என்று கூறவில்லை. குற்றத்திற்கு தண்டனை அளிக்கப்படும் போது , குற்றவாளி, அச்சமூகத்தினின்று தனிமைபடுத்தப்பட்டு சிறையிலடைக்கப்படுகின்றான் . அங்கு அவன் முன்னர் வாழ்ந்த சூழலிலிருந்து பிரிக்கப்பட்டு தன்னுடைய தனி மனித சுதந்திரத்தை இழந்துவிடுகின்றான் . அதனைத்தான் களையோடு ஒப்பிட்டுள்ளார் வள்ளுவரே ஒழிய, அவனின் உயிர் கொய்யப்படுவதாக குறள் வலியுறுத்துவதில்லை . அப்படியே ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும் , ஒரு கொலையானது பயன்படக்கூடியதாகப் பாவிக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டாலும் அது வேண்டத்தக்க செயலன்று என்பதனை வேறு குறட்பாக்களில் தெள்ளிதின் காணலாம் . கொடியக் குற்றத்திற்கு எடுத்துக்காட்டாக அவர் காட்டுவது , கொலையைத் தான் ("கொலையிற் கொடியாரை" என்பதை கவனிக்கவும்.). ஆக கொடியது என்று பிறர்க்கு ஓதியுணர்த்தும் வள்ளுவர் , அக்கொடியச் செயலையே மற்றொருவருக்குத் தண்டனையாக பறைசாற்றுவாரோ? மாட்டார். அறிந்தும், படித்து அறிந்ததை உணர்ந்தும் , உணர்ந்ததை பலருக்கு உணர்த்திடவும் கூடியது சமூக அமைப்பை வழி நடத்தும் அரசாங்கமும் அதன் அமைப்புகளுமான நீதிமன்ற மற்றும் காவல்துறை அமைப்புகளாம்.

அங்ஙனம் கொலை என்பது கொடியது , அது அழிவைத் தரக் கூடியது என்பதனை எல்லாம் குற்றவாளிக்கு வலியுறுத்தும் அரசு , தண்டனை என்று வரும்போது தானும் அதையே செய்வது என்பது வள்ளுவத்தில் பேதைமை என்று சாடப்படுகின்றது . இன்றைய மரண தண்டனை எதிர்ப்பாளர்களிடம் முதன்மையாக உள்ள கருத்து இதுவேயாகும்.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல். (குறள் 834)

மரணத்தை தண்டனையாக வழங்கும் ஒரு சமூகம் அதற்கென்று ஒரு அமைப்பையே கொண்டிருக்கின்றது. இவ்வமைப்பின் தலையாயப் பணியே ஒரு கொடியகுற்றவாளியைக் கொல்வதற்காக மரண தண்டனைக்கு அனுப்புவது தான் . அரசு வழக்கறிஞரிலிருந்து , மரணத் தண்டனை வழங்கும் நீதிபதி , மன்னிப்பு மனுவைப் பார்க்கும் ஆளுநர் , ஜனாதிபதி, தூக்கிலிடும் கொலையன் என்று பலதரப்பட்ட மக்கள் அங்ககங்களைக் கொண்டிருப்பது இவ்வமைப்பு. ஆக ஒரு போக்கற்ற அரசின் இலக்கணத்தை வள்ளுவன் உருவகிக்க 551 வது குறட்பாவில் அவர் காட்டும் காட்சி இத்தகைய அமைப்பைக் கொண்ட சமூகத்தை திடுக்கிடச் செய்யும் : "கொலையைத் தொழிலாகக் கொண்டவரை விடக் கொடியது." என்று அவர் சாடுவது, தண்டனையாக இருந்தாலும் கூட அதனை நிறைவேற்ற கொலையைத் தொழிலாகக் கொண்ட சமூக அமைப்பு , கொடியதிலும் கொடியது என்பதைத் தான்.

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து. (குறள் 551)

இக்கருத்தினையே 1764 ஆம் ஆண்டில் இத்தாலிய குற்றவியல் நிபுணரும் தற்கால மரண தண்டனை எதிர்ப்பாளர்களின் முன்னோடியாகவும் விளங்கிய செசாரெ பெக்காரியா , "சட்டங்கள், மனித சமூகத்தின் குரூரத்தினை மட்டுப்படுத்த முனைய வேண்டுமே ஒழிய , அவற்றைத் தாமே வெறித்தனமான முன்னோடிச் செயல்களால் அதிகப்படுத்திவிடக்கூடாது ," என்று எச்சரித்தார் [15]. 1869 ஆம் ஆண்டில் பிரபல ருஷ்ய நாவலாசிரியரான ஃபியொடோர் டொஸ்டொயெவ்ஸ்கி தனது நாவலில் இவ்வாறு கூறுகின்றார், "தண்டனைக்காக ஒரு கொலை என்பது அக்குற்றத்தினை விடவும் தீயது ஆகும் . சட்ட ரீதியாக ஒரு கொலை என்பது ஒரு கொலையாளியால் நிகழ்த்தப்படும் கொலையைக் காட்டிலும் கொடூரமானது ஆகும்." [16]

இன்று பெரும்பான்மையான மக்கள் பொதுவாக மரண தண்டனையை ஆதரிப்பவர்களாக உள்ளார்கள். அவர்களிடம் மாற்று முறைகள் பற்றி விவரிக்கும் போது அந்த ஆதரவு வேகமாகக் குறைவதை ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன [17]. ஆக மரண தண்டனையை ஆதரிப்பவர்கள் மிக மேலோட்டமாகப் பார்த்து உணர்வு ரீதியாக மட்டுமே அதனை தற்காப்பு முறையாகக் கருதி ஆதரிக்கின்றனர். அங்ஙனம் கருதும் அவர்கள் , கொலையாளிகளைக் கொல்வதால் , சமுதாயத்தில் உள்ள மற்ற மக்கட்கு அது பயன்படுவதாக கருதுகின்றனர். ஆக, கொலையையும், குற்றத்தினையும் கருதாமல், அதனை தடுக்கும் வழிகளை ஆராயாமல், அக்குற்றத்தினைச் செய்த கொலையாளியைக் கொல்வதின் மூலம் பயன் ஏற்படுவதாக ஒரு பேச்சுக்கு அவர்கள் வாதத்தை ஏற்றுக்கொண்டாலும், வள்ளுவருக்கு அதில் கருத்து ஒப்புமை இல்லை . பெரிதாக நன்மை தரக்கூடிய அளவுக்கு ஒரு கொலை பயன்படுமெனினும் , அத்தகையக் கொலைச் செயலால் நேரும் நன்மையை இழிவாகவே கருதுவார்கள் பண்பாளர்கள் என்னும் வள்ளுவனின் வாக்கு , மரண தண்டனையை ஆதரிக்கும் வாதங்களை சிதைக்கவல்லது.

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. (குறள் 328)

இத்தகைய நன்மை பயப்பிக்கக்கூடிய மாயை வாதங்களுக்கு அறிவியல் ஆய்வுகள் பதில் கூறினாலும், முத்தாய்ப்பாக வள்ளுவர் கூறுவதை நயன்றாக்குவோம் . தன்னுடைய இன்னுயிரே

போயிட நேரினும் அதனைத் தடுப்பதாக எண்ணி மற்றொரு உயிரினைப் போக்கும் செயலில் ஈடுபடக்கூடாது என்னும் வள்ளுவரின் வாக்கை நினைவில் கொளல் நலம்.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.  (குறள் 327)

பிற்காலத்தில் இயேசு பிரான்[18], ருஷ்ய மாமேதை லியோ டால்ஸ்டாய், இந்தியாவின் தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் , அமெரிக்காவின் மார்டின் லூத்தர் கிங் ஆகியோர் தத்தம் மதக் கொள்கைகளினால் இக்கருத்தினை வலியுறுத்தினாலும், வான்புகழ் வள்ளுவனார் அதனை சமுதாய நோக்கில் வலியுறுத்துவதை வியந்து பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.

சட்ட நெறிகளில் சீரியது இயற்கை சட்ட நெறி (Natural Law). ஆக வள்ளுவர் அத்தகைய சீரிய நெறிகளின் தலையாய பண்புடைய நெறியானது கொலை செய்யாமையே என்று அழகாக கூறுகின்றார்.

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.  (குறள் 324)

மேலும் வள்ளுவருக்கு கொலை என்னும் கருத்து அருவருக்கத்தக்கது என்பதனை அவரின் 329 குறட்பாவின் தெள்ளிய சொற்றொடர்களின் தெரிவின் மூலம் அறியலாம்.

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.  (குறள் 329).

இக்குறட்பாவில், "கொலைவினைய ராகிய மக்கள்" என்று கூறாமல், "மாக்கள்," என்று கூறுமட்டும், கொலைப் போன்ற கொடிய செயலை ஒரு கொலையாளி செய்தாலும் சரி, சாமனிய சமுதாயத்தின் பிரதிநிதியாக விளங்கும் அரசாங்கமானாலும் சரி , அவைகள் மனிதர்களன்றி மிருகங்களுக்கு ஒப்பாவர் என்று நகைச்சுவை பொருந்த தன்னுடைய ஆதங்ககத்தை வெளிப்படுத்துகின்றார் வான்புகழ் வள்ளுவனார்.

## <u>மரண தண்டனை தவறுகளுக்குட்பட்டது:</u>

நீதித்துறையின் சிறப்பே நீதி வழுவா முறையில் நீதி வழங்கப்படுவதேயாகும். குற்றம் சுமத்தப்பட்டவருக்கு சகல உரிமைகளையும், சந்தர்ப்பங்களையும் அளித்து, அவரின் வாதங்ககளையும் நன்கு கேட்டறிந்து, எவ்வித சந்தேகங்களும் (“beyond reasonable doubt”) இல்லாத போது தான் மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் என்பது இந்நாளையக் குற்றவியல் நடைமுறையாகும். அங்ஙனம் கோவலனுக்கு அனுமதி கொடுக்கப்படாதக் காரணத்தினால் தான் பாண்டியன் நெடுஞ்செழியன் முன் பத்தினித் தெய்வம் கண்ணகி தன் காற்சிலம்பை எடுத்து, வீசியெறிந்து, "தேரா மன்னா செப்புவது உடையேன்," என்று வெகுண்டெழுந்தாள். "செப்புவது உடையேன்," என்னும் அவ்வழுத்தத்தில், "நீ என் கணவருக்கு தன் நிலையை விளக்க சந்தர்ப்பம் கொடுக்காததலால், இதோ என் காதற் கணவர் பொருட்டு நான் அவர் நிலையை விளக்க வந்துள்ளேன்," என்று புரியவைக்கின்றாள். அன்று தொட்டு இன்று வரை இத்தகைய அலங்கோலங்கள் நடந்து தான் வருகின்றன. "இன்றும் தவறுகளுக்கான சாத்தியக்கூறு நேற்றைப் போன்றே உள்ளது[19]." பாண்டியன் நெடுஞ்செழியன் கொடுங்கோலல்லன். ஆனால் இளங்கோவடிகள் உணர்த்தும் உண்மை என்னவெனில், சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் சேர்ந்துவரின், எத்தகைய நிரபராதியும் தண்டனைக் கைதியாக மாறக்கூடும். ஏனென்றால் மனிதர்கள் பிழைக்குட்பட்டவர்கள், அவர்கள் வழங்கும் நீதிமுறைகளும் பிழைக்குட்பட்டது என்பதேயாம். அதிலும் மரண தண்டனை விதிக்கப்பட்டால், போன உயிரை மீண்டும் கொண்டுவரவே முடியாது. இத்தகையக் கருத்து மரண தண்டனையை எதிர்க்கும் அனைவரும்

பயன்படுத்தக்கூடிய ஒன்றாகும். இக்கருத்தையே பிரெஞ்சு எழுத்தாளர் ஆல்பர்ட் கேமஸ் 20-ம் நூற்றாண்டில், "The Stranger" என்ற நாவலில் அழகாக விவரித்து பல தரப்பட்ட மக்களின் மனதிலும் மரண தண்டனையைப் பற்றிய கேள்வி ஜுவாலையை ஏற்றினார்[20].

பெரும்பாலும் ஜனநாயக நாடுகளான அமெரிக்கா மற்றும் இந்தியாவில் சாதாரண மக்கள், மரண தண்டனை என்பது மிக அபூர்வமாக வழங்கப்படுமொன்று, எனவே அதில் பிழைகளோ அல்லது குற்றங்களோ இருக்காது என்று எண்ணுகின்றனர். ஆனால், மரண தண்டனை எதிர்ப்பு கத்தோலிக்க கன்னிகாஸ்திரி சகோதரி கெலென் ப்ரெஜென் கூறுவது யோசிக்க வேண்டிய ஒன்றாகும். "நான் அமெரிக்கா உலகின் சிறந்த நீதித்துறையைக் கொண்டுள்ளது என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்போது வேறு மாதிரி உணர்ந்துள்ளேன். எனக்கு இப்போது இந்நாட்டின் மரண தண்டனை அவ்வளவு அத்துப்படியாக உள்ளதால் ஒன்று மட்டும் உறுதியாக கூறமுடிகின்றது. அது என்னவென்றால், கொலையே செய்யாத அப்பாவி மக்கள் கொலைக்குற்றவாளிகளோடு சேர்த்து கொல்லப்படுகின்றனர்[21]." "மனிதனின் நீதிவழுவா தீர்ப்புத் திறன் எனக்கு பூரணமாக நிரூபனமாகும் வரை நான் மரண தண்டனைக்குத் தடை விதிக்க கோருவேன்,"[22] என்று பிரெஞ்சு புரட்சியாளர் மார்க்விஸ் டெ லாஃபயட் அவர்கள் அன்று கூறியது இன்று மட்டும் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. இந்திய நீதிபதி மதிப்பிற்குரிய P.N. பகவதி, "சட்ட நடைமுறைகள் எவ்வளவு பாதுகாப்பாக இருந்தாலும் நீதிவழுவாமல் தீர்ப்பின் தவறிலிருந்து தப்பிப்பது என்பது கூடாத காரியமாகும்."[13]

அறன் இழுக்காது, அல்லவையை நீக்கி ஆள்வது அரசின் கடமை என்று வள்ளுவனார் குறள் 384-ல் வலியுறுத்துவதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.
அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு. (குறள் 384)

நடைமுறையில், உண்மையானக் குற்றவாளிகளை எவ்வாறு தண்டிக்க வேண்டுமென்பதில் வேண்டுமானால் மாற்றுக் கருத்து இருக்கலாம் ஆனால் நிரபராதிகள் அநியாய முறையில் மரணதண்டனைக்கு ஆளாகக்கூடாது என்பதில் எவருக்கும் மாற்று கருத்து இருக்க முடியாது. தற்கால மனிதர்களின் கூற்றுக்களாலும் ஆய்வுகளாலும் அஃது சாத்தியம் என்று தெளிவாக தெரியவரும் போது அதனை அரசுகள் கலையவேண்டும் என்பதனை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது குறள் 384.

## <u>மரண தண்டனை குற்றங்களைத் தடுக்க வல்லது அல்ல:</u>

பெருமதிப்பிற்குரிய நீதிபதி உயர்திரு V.K. கிருஷ்ணா அய்யர் அவர்கள் ஒரு வழக்கில், "எங்கெல்லாம் ஒரு நீதிபதி ஒரு குற்றவாளிக்கு தூக்கிலிட ஆணை பிறப்பிக்கின்றாரோ, அங்கெல்லாம் மனித உரிமைகளின் கொடியானது அரைக் கம்பத்தில் தொங்கவிடப்படுகின்றது," என்றார். மேலும், "கழுத்தை நெரிக்கும் குரூர வலிமையற்ற நிவாரணியைத் தலையில் தூக்கி கொண்டாடும் இன்றைய நீதிமுறை பாரம்பரியத்தையும், அது வளர்க்கும் கலாச்சாரக் கொடுமையும், ஒரு அராசாங்கத்தின் கொலை நடவடிக்கையால் ஒரு கொடூரக் குற்றவாளியின் வழக்கத்தினை அழிக்க முடியும் என்னும் அம்மாயைக் கருத்தினை, தயவு தாட்சணியமில்லாமல் அம்பலப்படுத்தி, குற்றத்திற்கான உண்மை காரணங்களையும், சிகிச்சை முறையின் மூலமாக அது தணிக்கும் நிவாரண முறைகளையும் காணவேண்டியது அவசியம்," என்கின்றார். இதனைத் தானே வள்ளுவ பெருமகனார், "சமூகத்தில் எத்தகைய குற்றம் நோயாகத் தோன்றுகிறது? அத்தகைய குற்ற நோய்களுக்கு காரணம் யாது? அத்தகைய குற்ற நோய்களை தீர்க்கும் வழிதான் என்ன என்பதனை முறையாகச் சிந்தித்து செயல்பட வேண்டும்," என்று குறள் 948-ல் கூறுகின்றார்? உடல் நோய்க்கு என உரையாசிரியர்கள் பலர் இக்குறட்பாக்குப் பொருள் கூறியிருக்கலாம், ஆனால் இஃது சமுதாய

நோய்களுக்கும் பொருந்தும் என்பது எம்முடைய கருத்து மட்டுமன்று , தமிழ் ஆர்வலர் கலைஞர் கருணாநிதியின் கருத்தும் கூட ஆகும்[23].

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (குறள் 948)

ஆராய்ச்சிகளின்படி, மரணதண்டனையினால் குற்றங்கள் குறைவது இல்லை, மாறாக சமுதாயத்தின் குரூரத்தை அது அதிகரிப்பதால் மேலும் குற்றங்கள் நடக்க வழிகோலுவதோடு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் நம்பிக்கையிழந்து திரிந்துக்கொண்டிருக்கும் சிலருக்கு குற்றம் புரிந்து அதன் மூலம் தங்கள் உயிரை அரசின் மரண தண்டனையின் மூலமாகத் தீர்த்துக்கொள்வதற்குக் கூட வழிகோலுகின்றது[24]. மேலும், கொடியக் குற்றம் புரிபவர் சாதாரண மனிதனைப் போன்று யோசிப்பதில்லை. அவர்கள் தங்கள் செயலுக்கும் அதன் மூலம் பின்னர் கிடைக்கப்போகும் மரணதண்டனையைப் பற்றியோ துளியேனும் சிந்திக்கும் நிலையில் இல்லை. நிறையக் குற்றங்கள், கோபத்தின் தாக்கத்தினாலோ, வன்முறையில் ஊரிய ஊரகங்களில் வளர்ந்ததாலோ, மது[25], மாது, போதை[25] போன்ற அவாவினாலோ, பசி, பட்டினி, சமூகத்தின் மீதுள்ள அளவற்ற கோபத்தினாலோ, சிறு வயதில் நடைபெற்ற பாலியல் பலாத்கார செயல்களினாலோ[26], மனவளர்ச்சிக் குன்றினாலோ[27], அல்லது ஒரு கொள்கைப்பிடிப்பினால் எவ்வாறேனும் ஒரு கொலையை செய்துவிடத்துடிக்கும் திடீர் உணர்வினாலோ நடப்பதேயாம். ஆக மரண தண்டனை துளியேனும் இத்தகைய குற்றங்களை தடுப்பது கிடையாது . மரண தண்டனை இருந்தாலும் அத்தகையக் குற்றங்கள் நடந்துகொண்டிருக்கும் என்பதே அடிப்படை வாதம். மரண தண்டனையும் இல்லாமல் போனால் தற்சமயம் நடக்கும் குற்றங்கள் பல மடங்கு அதிகரிக்கும் என்னும் வாதம் தற்போதைய ஆய்வுகளின் முன்னால் தவிடுபொடி ஆகிவிடுகின்றது. மேற்கத்திய நாடுகள் பலவும் மரண தண்டனையை தடை செய்தபோது, குறிப்பாக குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை . மாறாக, மேற்கத்திய நாடுகளில் ஒரே நாடான அமெரிக்காவில் மட்டும் குற்றங்களின் எண்ணிக்கை, மரண தண்டனையை தடை செய்துள்ள நாடுகளை விட அதிகாமாக உள்ளது. 1976-ஆம் ஆண்டு மரண தண்டனையை தடை செய்த கனடா நாட்டில் , கொலைக்குரிய கொடிய குற்றங்கள் 40% குறைந்துள்ளது இவ்விடத்தில் நோக்கத்தக்கது . மேலும் அமெரிக்காவிலேயே கூட மரண தண்டனை தடைசெய்யப்பட்டுள்ள மாநிலங்களில் தடை செய்யப்படாத மாநிலங்களை விட குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுவது , இவ்வகை தண்டனையால் நன்மை மட்டுமன்றி தீய விளைவுகள் கிடைப்பதைத் தான் காட்டுகின்றது . அத்தகையத் தீய விளைவுகள் மேலும் தீயவகைகளைத்தான் நல்கும் என்னும் வள்ளுவனாரின் வாக்குச் சொல்லை நினைவில் கொள்வோமாக.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினு மஞ்சப் படும். (குறள் 202)

ஆல்பர்ட் கேமஸின் வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், "மரண தண்டனையை வேறு எவ்வித கண்ணியமும் இல்லாதக் காரணத்தால் அதனை உண்மையின் கண்ணியத்தை வைத்தாவது ஒரே வார்த்தையில் விவரிப்போம் : பழிக்குப் பழி.[19]" ஆக, மரண தண்டனை என்பது பழிக்குப் பழி வாங்கும் செயலேயன்றி வேறு எதுவும் கிடையாது. ஆக வள்ளுவர் பழிக்குப் பழி வாங்கும் குணத்தை பல்வேறு அதிகாரங்களில் விவரித்துள்ளதை இங்கு நினைவில் கொள்ளல் நலம்.

<u>தண்டனை மனிதனின் நல்வழிப்படுத்துதலுக்குரியதேயன்றி அவனை கழிப்பதற்கன்று:</u>

குற்றங்களைத் தண்டிக்கும்போது , அவை பழிக்குப் பழியாக ("retributive justice") இல்லாமல், அத்தகையக் குற்றங்கள் மீண்டும் நிகழா வண்ணம் பாதுகாக்க வல்லவையாக ("deterrent justice") இருத்தல் அவசியம் என்னும் வள்ளுவனின் சீரிய குற்றவியல் தொலை நோக்குப் பார்வை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா

லொதாங் கொறுப்பது வேந்து. (குறள் 561)

இக்குறட்பாவின் கருத்துக்கள் பல , மேலே விவரிக்கப்பட்ட ஆய்வுகளோடு சேர்ந்து நோக்கத்தக்கதாகும். மரண தண்டனை குற்றங்களைத் தடுக்கவல்லவையுமல்ல, அவை செய்யப்பட்ட கொடிய குற்றத்திற்கேற்புடைய வண்ணம் அதே அளவுகோலுடையதுமல்ல . ஒரு மனிதன் தன்னுடைய மரணத்தை எண்ணி எண்ணி புழுவாக மடியவேண்டிய அவல நிலை மரண தண்டனைக்கு உண்டு . ஆக, "குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை ஆராய்ந்து (தக்காங்கு நாடித் ), அக்குற்றத்தை செய்தவன் தொடர்ந்து செய்யாமல் அவனை உலகமும் ஏற்கும் வண்ணம் (தலைச்செல்லா வண்ணம் ), குற்றத்திற்கு ஏற்றவாறு (தக்காங்கு ஒறுப்பது )" தண்டிக்க வேண்டும் என்று வள்ளுவர் 21-ஆம் நூற்றாண்டில் எஞ்சிய மரண தண்டனை வழக்கத்திலுள்ள இந்தியா , அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளை புதிய குற்றவியல் பார்வைகளில் இன்றையக் குற்றங்களை அணுகச்சொல்லித் தூண்டுகின்றார் . மரண தண்டனை ஏன் இன்னும் குரூரமானது என்று ஃபியொடோர் டொஸ்டொயெவ்ஸ்கி கூறுவார் என்றால் , குற்றவாளியின் கொடூர கொலையின்போது கூட அவனிடம் சிக்கிய பலி ஒருவித பிழைப்போமென்ற நம்பிக்கையோடு போராடும். அப்போராட்டமே, மரணத்தின் குரூரத்தைச் சற்றே தணிக்கும் . ஆனால், மரண தண்டனையில் அத்தகைய நம்பிக்கை அறவே எடுக்கப்பட்டுவிட்டு சரியான நாள் நேரம் குறிக்கப்பட்டு அந்நாளை ஆவலோடும் அச்சத்தோடும் எதிர்கொண்டிருக்கும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு சமூகமளிக்கும் குரூரத்தின் உச்சி[16].

குற்றங்களைத் தண்டிக்கும் போது அதற்கென்று ஒரு கருணை அழகினை அரசானது பின்பற்றவேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துவது , மரண தண்டனையை ஒருபோழ்தும் அவர் ஏற்க இயலாததை பின்வரும் குறள் மூலமாக அறியலாம்.
கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். (குறள் 562)

"கடிதோச்சி" என்ற சொல்லின் மூலமாக, குற்றங்களை நிகழாமல் தடுக்கும் பொருட்டு கடுமையானத் தோற்றத்தோடு காணப்பட்டாலும் , அத்தண்டனையை விதிக்கும்போது மென்மையாக விதிக்க வேண்டும் ("மெல்ல வெறிக") என்று கூறுமட்டும் மனித நேய மற்றும் மனித உரிமைகளின் உன்னத பாதுகாவலராய் வள்ளுவர் பெருந்தகை விளங்குவது உள்ளங்கை நெல்லிக்கனி. குற்றவாளிகளுக்கும் சமுதாயத்தின் மென்மை தேவை ஏனென்றால் அதுவே குற்றங்களைத் தடுக்கவல்ல மருந்து என்று வள்ளுவர் நம்பினார் போலும். இல்லையெனில், சமூகத்தின் நெடு நாளைய செல்வாக்கு நீங்காமல் இருக்க வேண்டுபவர்கள் பின்பற்ற வேண்டிய வழி இஃது என ஏன் அவர் கூறவேண்டும் என்று நாம் அனைவரும் சிந்தித்தோமேயானால் ருஷ்ய மாமேதையும் , காந்தியடிகளின் ஆத்மார்த்த குருவுமான லியோ டால்ஸ்டாயின் எச்சரிக்கை நினைவிற்கு வரும்: "நாம் போன சந்ததியினரின் கூடாவொழுக்க முறைகளான மனித இறைச்சியுண்ணும் மனித இயல்பினைப் பழித்தது போன்றும் நரபலியை அடியோடு வெறுத்தது போன்றும் , நம்முடைய தற்கால தண்டனை முறைகளையும் குற்றவியல் சட்டங்களையும் வருங்கால சந்ததியினர் அடியோடு வெறுத்து இவ்வாறு வினவுவர் :'எங்ஙனம் அவர்கள் இத்தகையத் தண்டனைகளின் குரூரத்தன்மையினையும் சட்டங்களின் உதவாத்தன்மையினையும் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தனரோ?"[28]

சிறையில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு சமுதாயத்தின் மற்ற மக்களுக்காக கவிதையையும் , தெருக்கூத்தையும் நிகழ்த்திவரும் ஆயுள் தண்டனைக் கைதியும், மகராஷ்டிர மாநில அரசின் கலை மற்றும் கலாச்சார வாரியத்தின் விருதினை வென்ற சிவாஜி வேடு சாலுன்கே இருக்கின்றார் . இவரின் பங்களிப்பில் மதிமயங்கி மகராஷ்டிர மாநிலம் முழுவதுமுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகளின் கவிதைகளையெல்லாம் ஒரு தொகுப்பாக (சிறைக்குப் பின்னாலிருந்து கவிதைகள் ) வெளியிட்டிருக்கிறது அரசு[29]. மகாராஷ்டிர அரசு சிவாஜி போன்ற கைதிகளையெல்லாம் பாதுகாப்பு

குறைவாகவுள்ள சிறைகளில் வைத்து அவர்கள் நாட்டுக்கு அளிக்கும் கொடைகளை நுகர்ந்துகொண்டிருக்கிறது. மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் இவையெல்லாம் வெறும் கானல் நீராகவல்லவா போயிருக்கும் என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

<u>சமுதாயத்தில் நலிந்தோரை மட்டுமே குறிவைப்பது மரண தண்டனை:</u>
நீதிபதி உயர்திரு வில்லியம் ஓ . டக்ளஸ் அவர்கள் ஒரு முறை கூறியதாவது : "எமது வழக்கு கோப்புகளைத் தேடிப் பார்த்து தோற்று போகின்றோம், சமுதாயத்தின் உயரிய மனிதர் எவரேனும் மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனரா என்று ."[30]. அமெரிக்காவில், மரண தண்டனையில் வாடும் குற்றவாளிகளில் 90% பேர் ஒரு நல்ல வக்கீலை அமர்த்தக்கூட திறனற்றவராக இருக்கின்றார்கள் [31]. ஒரு முறை தீர்ப்பு வந்துவிட்டால் , மேல் முறையீட்டில் நடைமுறைகள் பற்றி மட்டும் தான் பரிசீலனை செய்யப்படுமேயொழிய , வழக்கின் ஆரம்பத்திலிருந்து அதன் தகுதியை ஆராய்வதில்லை[24]. எனவே கீழ் நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டால் மேல் முறையீட்டில் அதனை விலக்குவது என்பது பெரும்பாலுமான வழக்குகளில் கூடாத காரியமாகிவிடுகின்றது. பணக்காரர்கள் குற்றம் சுமத்தப்படும்போது அவர்களுக்கென்று ஒரு வக்கீல் குழுவே பணியாற்றுகின்றது. மேலும் அரசு வக்கீல் அத்தகைய சமுதாய பெரும்புள்ளியின் மேல் மரண தண்டனை என்னும் வீச்சருவாளை வீசுவது கிடையாது. அமெரிக்காவைக் கலக்கிய O.J. சிம்ஸன் வழக்கில் சாட்டப்பட்ட குற்றம் கொடுமையானதாக இருந்தும் கூட சாட்டப்பட்டவர் பெரும்புள்ளி என்பதால் மரண தண்டனை கோரப்போவதில்லை என்று அரசு வக்கீல் முதலிலேயே அறிவித்த கொடுமை அனைவருக்கும் நினைவிருக்கலாம். இந்தியாவில் பிகாரில் கயா மாவட்டத்தில் ஓர் உயர்சாதி பிரிவினரை 400 பேர் தாக்கிக் கொன்ற வழக்கில் 4 வேளாண்மை தொழிலாளர்களை மட்டும் கைது செய்து தூக்கு மேடைக்கு அனுப்பிய அலங்கோலத்தினை என்னவென்று சொல்வது. மீதமிருந்த 396 பேர் நிரபராதிகாளா? 400 பேர் செய்த ஒரு குற்றத்திற்கு 4 பேரை தூக்கு மேடைக்கு அனுப்புவது சட்டம் [13] பல நேரங்களில் ஏழை பாழைகளுக்கு எதிராக இயங்கவல்லது என்பதனைத்தான் காட்டுகின்றது. மேலும் இன்னுமொரு வழக்கில், 3 பேர் ஒரே குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்பெற்றனர் , ஆனால் அதில் ஒருவருக்கு பாரத ஜனாதிபதியின் கருணை மனுவினால் விடுதலைப் பெற்றும், இரண்டாம் நபர் ஆயுள் தண்டனைக் கைதியாக மாற்றப்பட்டும், மூன்றாமவரோ வேறு எதுவும் பெறமுடியாதவராய் தூக்கு மேடைக்கும் அனுப்பப்பட்டு கொல்லப்பட்டதையும் கண்டு அப்போதைய இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி உயர்திரு Y.V.சந்திரசூட் அவர்கள் கவலையோடு பின்வருமாறு கூறினார்: "இவ்வழக்கின் பாதையை உற்று நோக்க மிகவும் துக்கமாக உள்ளது. 3 நபர்கள் ஒரே வழக்கில் பொதுவானத் தீர்ப்பின் மூலமாக தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டனர் . ஆனால் வருந்தத்தக்க வகையில் மூவரும் மூவேறு விதியினைச் சந்திக்க நேர்ந்துள்ளது ."[13] மரண தண்டனையின் அநியாயங்களின் மிகக் குறுகிய மாதிரியே இது . இதுபோன்று ஒவ்வொரு வழக்கிலும் கருப்பர் இனத்தை சேர்ந்தோரும் , கீழ் சாதியினர், ஏழ்மை நிலையைச் சேர்ந்தவர்கள் என சமுதாயத்தின் மிகவும் பின்தங்கியவர்களே மரண தண்டனைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர் என்பது வேதனை தரும் விசயமாகும் . அத்தகையோரின் குடும்பங்களும் பாதிக்கப்படும் அவலத்தினை தனன்செயன் சட்டர்ஜியின் மரண தண்டனை வழக்கின் போது செய்திதாளில் வெளிக்கொணர்ந்தோம்[32].

"சட்டத்தின் கைகளில் இருந்து தப்ப முடியாது ," "சட்டம் தன் கடமையை செய்யும் ," என்னும் இந்நாளைய வாதங்களுக்கு ஏற்றாற்போல் அன்றே வள்ளுவனார் "nobody can escape from the long tentacles of law" என்பதைக் குறள் 204-ல் குறிப்பால் உணர்த்திச் சென்றுள்ளார்.
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. (குறள் 204)

ஆக யாராக இருந்தாலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பது ஆகக்கூடாத காரியம் என்பதை அவர் வலியுறுத்துவதன் மூலம் இன்று நம் சமூகங்கள் அத்தகைய சீரிய சமதத்துவத்தைக்

கட்டிக்காக்கின்றதா என்றால் , அக்கேள்விக்கு நம்மால் ஒரு விடையை தைரியமாக கொடுக்கமுடியவில்லை. மேலும், பின்வரும் குறளில் , ஏழை பணக்காரன் , கீழ்சாதி மேல் சாதி , வெள்ளையன் கருப்பன் என்ற பாகுபாடு ஏதுமின்றி செய்யப்பட்ட குற்றம் என்ன என்பதை முதலில் ஆய்ந்து (ஓர்ந்து), பின்னர் அவ்வாராய்வின்போது எப்பக்கமும் சாயாமல் (கண்ணோடாது) நடுவு நிலை தவறாமல் (இறைபுரிந்து), குற்றம் புரிந்தவர் அரசனானாலும் சரி , ஆண்டியானாலும் சரி , அவரவரின் தகுதியை ஒரு பொருட்டாய் பாராமல் (யார்மாட்டும்), குற்றம் சுமத்தப் பெற்றவருக்கு அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றம் என்ன, அவருடைய வாதாடும் உரிமைகள் என்ன, தனக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கும் சாட்சிகளும் என்ன என்பதனையெல்லாம் எடுத்தியம்பி அவ்வாறு, எல்லா வாய்ப்பும் நல்கிய பின்னர் வழக்கின் அனைத்து தன்மைகளையும் ஆராய்ந்த பின்னரே தீர்ப்பு வழங்க வேண்டும் என்று ஒரு 100% பிழையற்ற சட்ட சூழலை நம் பார்வைக்கு வைத்து நெகிழவைக்கின்றார் வான்புகழ் வள்ளுவனார்.

ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. (குறள் 541)

<u>முடிவுரை:</u>

குற்றங்களுக்குத் தீர்வு என்பது வேறொரு அரசாங்க அனுமதிப்பெற்ற "குற்றமாக" இருக்கமுடியாது என்பதனை வெறும் வள்ளுவரின் அரசியல் , சமூக, சட்ட மற்றும் குற்றவியல் கருத்துக்களைத் தழுவிய குறட்பாக்கள் மூலமாக மட்டுமே எமது ஆய்வுரையில் சமர்ப்பித்துள்ளோம் . "இன்னா செயல்வகை" போன்ற ஆன்மீகக் கருத்துக்களில் இறங்கி முத்துக்களை அள்ளுவோமானால், மரண தண்டனையை வள்ளுவர் பெருந்தகை ஆன்மீக அடிப்படையிலும் ஒத்துக்கொள்ளாதவர் என்பது உடனே புலப்படும். ஆய்வுகள் மூலமாக மரண தண்டனைக்கு மாற்றாக, சாமீன் இல்லாத ஆயுள் தண்டனையாகவோ அல்லது 25 ஆண்டுகட்கு பிறகு சாமீனில் வெளியேறும் விதமாக தண்டனை வழங்குவதையோ மரண தண்டனை ஆதரிக்கும் மக்கள் மாற்றாக ஏற்றுக்கொள்கின்றனர் என்பது நிரூபனமாவதால், அரசு அத்தகையச் செயல்களைச் செய்யலாம் . மேலும் பெருங்குற்றங்களுக்கு வலிகோலும் அறியாமை, கல்வியின்மை, ஏழ்மை, பஞ்சம், பட்டினி, போதை போக்குவரத்து, மது கொள்கைகள் என்று பலதரப்பட்ட அடிப்படை விசயங்களில் கவனத்தை செலுத்தி அதுமட்டுமல்லாமல் சிறை சீர்த்திருத்தங்களைச் செவ்வெனச் செய்து , சிறையை ஒரு சீர்திருத்தப் பள்ளியாகவும், கோயிலாகவும் மாற்ற அரசுகள் முயலுமானால் , நல்லதொரு எதிர்காலம் நம் சமூகங்களுக்கு உண்டு.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் (குறள் 466)

வள்ளுவப்பெருமகனாரின் குறட்பாக்கள் மூலம் அவர் மரண தண்டனையை ஒரு போழ்தும் ஏற்றுக்கொள்ளும் மன நிலைபடைத்தவராக இல்லை என்பதனை இப்பார் போற்றும் தமிழ் குழுவினர் முன் பணிவன்போடு சமர்ப்பித்துவிட்டோம் . பண்டையக் காலக் கருத்துக் கருவூலங்களாகத் திகழும் திருக்குறள் போன்ற காவியங்கள் இக்காலத்திற்கேற்றப் பிரச்சினைகளுக்கு அக்காலத்திலேயே அடிக்கோடிட்டுள்ள பாங்கினை தமிழரல்லாத வேற்று நாட்டோரிடமும் தமிழ்கூறு நல்லுலகம் எடுத்துச் செல்லவேண்டும் என்பதே எமது பேரவா. வாழ்க தமிழ்!! வளர்க தமிழ்!!!

# மேற்கோள்கள்


1. நீதிபதி உயர்திரு. சி. இராமகிருட்டினன், "தமிழர் சட்டங்கள்," தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு, (International Tamil Language Foundation Publication, 2000), pp 1100.
2. Furman v. Georgia, 408 U.S. 238 (1972), US Supreme Court.
3. Gregg v. Georgia, 428 U.S. 153 (1976), US Supreme Court.
4. 8th Amendment, United States Constitution, ( http://www.gpoaccess.gov/constitution/pdf/con019.pdf )
5. Article 21(1), Constitution of India.
6. Bachan Singh V. State of Punjab, AIR 1980 SC 898: 1980 Cr LJ 636; Attorney General of India v. Lachmi Devi, AIR 1986 SC 467: 1986 Cr LJ 364.
7. Amending Act 26 of 1955, Government of India.
8. Criminal Procedure Code Amendment 1973 effective April 1, 1974
9. Jashubha Bharatsinh v. State of Gujarat, AIR 1994 SCW 2360; Bishan Sings v. State of Punjab, AIR 1983 SC 748: 1983 cr LJ 973; Kanna v. State of Tamilnadu, AIR 1989 SC 396.
10. Harnam v. State of Uttar Pradesh, AIR 1976 SC 2071.
11. Roper v. Simmons (No. 03-0633), United States Supreme Court, March 1, 2005.
12. "Gregg vs. Georgia: The beginning of the modern era of America's Death Penalty," Amnesty International, ( http://www.amnestyusa.org/abolish/greggvgeorgia/index.html )
13. "Hanging Underscores Death Penalty's Injustice," Navhind Times, August 24, 2004 ( http://www.demaction.org/dia/organizations/ncadp/news.jsp?key=545&t= )
14. Ismayil Ibrahim Liyakath, Tirunelveli, TN, "Dhananjoy's case (Letters to the Editor)," The Hindu, July 3, 2004. ( http://www.thehindu.com/2004/07/03/stories/2004070301371006.htm )
15. Three Centuries of Debate on the Death Penalty, ed. Greenhaven Staff (St. Paul, Minnesota: Greenhaven Press, 1986). pp 26-28. Quoted from Cesare Beccaria, An Essay on Crimes and Punishments, originally published in London by F. Newberg, 1775.
16. Fyodor Dostoyevsky, The Idiot (New York: Penguin Books, 1955), p 46.
17. Gardner C. Hanks, "Modern Opposition to the Death Penalty," in Against the Death Penalty – Christian and Secular Arguments Against Capital Punishment (Scottdale, PA: Herald Press), p 69.
18. The Holy Bible, Gospel of St. Matthew, Chapter 6: 38-46 (RSV).
19. Albert Camus, "Reflections on the Guillotine," in Resistance, Rebellion, and Death (New York: Vintage International, 1988).
20. Albert Camus, The Stranger (New York: Vintage International, 1988).

21. Rev. Sr. Helen Prejean, The Death of Innocents – An Eyewitness Account of Wrongful Executions, (New York: Random House, 2005).

22. Mark Constanzo, Just Revenge – Costs and Consequences of the Death Penalty, (New York: St. Martin's Press, 1997) p.71

23. கலைஞர் மு.கருணாநிதி, "திருக்குறள், கலைஞர் உரை," திருமகள் நிலையம், 2001, பக்கம் 190.

24. Anthony G.Amsterdam, “Capital Punishment,” in The Death Penalty in America (New York: Oxford University Press, 1982), p 357.

25. Bureau of Justice Statistics. Sourcebook of Criminal Justice Statistics – 1991 (Washington, DC: US Department of Justice, 1992), pp: 473.

26. Dorothy Otney Lewis, “Neuropyschiatric, Pyschoeducational, and Family Characteristiscs of 14 Juveniles, Condemned to Death in the United States,” American Journal of Psychiatry 145/5 (May, 1988): pp 584-589.

27. “Testimony of James W. Ellis as President of the American Association on Mental Retardation, Before the United States Senate committee on the Judiciary, September 27, 1989”

28. Leo Tolstoy, “July 4,” A Calendar of Wisdom – Daily Thoughts to Nourish the Soul – Written and Selected from the World's Sacred Texts by Leo Tolstoy (New York: Scribner, 1997), p 198.

29. NewInd Press, “Lifer writes poems behind the bars ,” July 25, 2004. ( http://www.newindpress.com/Newsitems.asp?ID=IE420040724110218&Title=Features+-+People+&+Lifestyle&Topic=0& )

30. Hugo Adam Bedau, The Case Against the Death Penalty. (Washington DC: American Civil Liberties Union, 1992). ( gopher://gopher.nyc.pipeline.com:6601/00/issues/death/case_against )

31. Ibid 28.

32. Rex S, Arul, Smyrna, Georgia, USA, “Clemency rejected (Letters to the Editor),” The Hindu, August 6, 2004. ( http://www.hindu.com/2004/08/06/stories/2004080601291001.htm)